# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.9 இந்தக் குணமாகுதல்

**வேத வசனம்:** **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.**

*ஏசாயா 53:5*

**அறிக்கை:** **தம்முடைய தழும்புகளால் இயேசு கிறிஸ்து எனக்கு சுகத்தையும் சமாதானத்தையும் சம்பாதித்திருக்கிறார்**

**சத்தியம்:** இயேசு கிறிஸ்துவே நம்மைச் சுகமாக்கும் கர்த்தர். அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தத் தண்டனையினிமித்தம் நமக்கு சமாதானமும் அவருடைய தழும்புகளால் குணமாக்குதலும் உண்டானது.



### வேத பகுதி: அப். 3:1-9, ஏசாயா 53

**பாடம்** **1. அற்புதமான சுகம்:** இயேசுவிடம் அற்புத சுகம் உண்டு என்று வேதபுத்தகம் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் பேதுரு ஒருமுறை தன்னிடம் பிச்சை கேட்ட ஒரு நடக்க இயலாதவனைப்பார்த்து இவ்விதம் கூறினார், “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி. வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான்”. உடனே அந்த மனிதன் சுகமானான். அவன் குதித்து எழுந்து நடக்கத்துவங்கினான். அவன் அப்போஸ்தலருடன் இணைந்து தேவாலயத்திற்குள் சென்று தாவிக்குதித்து தேவனை ஆராதித்தான். அப்போஸ்தலர்கள் பேதுரு மற்றும் யோவானுடன் இருந்த தூயஆவியானவரை அவர்கள் ஆழமாக விசுவாசித்தபடியால் இந்த பெரிய அற்புதத்தை அவர்களால் செய்ய முடிந்தது. (அப். 3:1-9)

**2. கிறிஸ்து செலுத்திய விலைக்கிரயம்:** இயேசு கிறிஸ்து மனிதருடைய சரீர பெலனுக்காகவும் பாடுகளை அனுபவித்தார். நாம் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்று வேதபுத்தகம் குறிப்பிடுகிறது. இயேசுவை விசுவாசிப்பவர்கள் ஆவிக்குரிய சுகத்தைப் பெறுவார்கள். முடவர்களாலும் எழும்பி நடக்க முடியும்.

**3. ஆத்துமாவிற்கு சுகம்:** சரீர சுகத்துக்கும்மேலாக சிலருக்கு சிலவேளைகளில் மனப்போராட்டங்களிலும் சுகம் தேவைப்படுகிறது. பலர் மன அழுத்தம், தூக்கமின்மை, மனநலபாதிப்பு போன்ற நோய்களால் அவதிப்படுகிறார்கள். இதுபோன்ற வியாதிகள் மன வேதனை, உதவியின்மை, அடிமைத்தனம் போன்றவைகளால் உருவாகின்றன. வேதாகமம் சொல்லுகிறது, “இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்”. (சங். 147:3)

**4. இயேசு தரும் சமாதானம்:** இயேசு நம்முடைய தண்டனைகளை அவர்மேல் ஏற்றுக்கொண்டு அனுபவித்தப் பாடுகள் நமக்கு சுகத்தைக் கொண்டுவருகிறது. தேவனுடைய வார்த்தை தரும் வாக்குறுதி, “மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம். முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்”. (நீதிமொழிகள் 17:22)

**முடிவுரை:** தேவன் நம்மை குணமாக்குகிறவர். நாம் எப்பொழுதும் மகிழ்வுடனும் தேவனுடைய சமாதானத்துடனும் இருக்க வேண்டும். துக்கமான ஆவியை எப்போதும் வைத்திருக்கக்கூடாது.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.